தமிழ் நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-60006

ந.க.எண். 92 /எம்/ இ3/ 2019 நாள். 2.5.2019

பொருள் பள்ளிக் கல்வி - மாணாவர்களுக்கு வழங்கப்படும் மாற்றுச் சான்றிதழ்கள் அனைத்தும் 2018-2019 கல்வியாண்டு முதல் கல்வித் தகவல் மேலாண்மை இணையதளத்தில் (EMIS web portal) ஏற்படுத்தப்பட்டுள்ள வசதியினை பயன்படுத்தி அச்செடுத்து வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள தலைமையாசிரியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பக் கோருவது - சார்பாக.

-------

மாணவர்களின் விவரம் மற்றும் கல்வி பயில்வது சார்பான விவரங்கள் அனைத்தும், அனைத்து வகை பள்ளிகளிலும் பயிலும் கல்வித் தகவல் மேலாண்மை இணையதளத்தில் (EMIS) சார்ந்த தலைமையாசிரியர்களால் உள்ளீடு செய்யப்பட்டுள்ளது. புதிய மாணவர்கள் சேர்க்கை / தேர்ச்சி / வேறுபள்ளிக்கு மாற்றம் / நீக்கம் ஆகிய பள்ளி / மாணவர்கள் சார்ந்த அன்றாட பணிகள் அனைத்தும் இணையதளம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், அரசுத் தேர்விற்கான மாணவர்கள் விவரங்களும் மேற்காண் இணையதளத்தில் பராமரிக்கப்படும் தகவல்களிலிருந்து பெறப்பட்டு தேர்வு பணிகள் அனைத்தும் கல்வித் தகவல் மேலாண்மை இணையதளத்துடன் (EMIS) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

Padasalai

2. இந்நிலையில், தொடக்க / இடைநிலை / மேல்நிலைக் கல்வி மாணவர்கள் இட மாறுதல் மற்றும் கல்வி நிறைவின் போது மாணவர்கள் பள்ளியை விட்டு வெளியே செல்லும் போது வழங்கப்படும் மாற்றுச் சான்றிதழ் இந்த ஆண்டு முதல் கல்வித் தகவல் மேலாண்மை இணையதளம் (EMIS) மூலம் மட்டுமே வழங்கப்படவேண்டும். அனைத்து வகை பள்ளிகளாலும் இந்நடைமுறையினை பின்பற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மாணவர்களது மாற்றுச் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து தலைமையாசிரியர் கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரையிட்டு வழங்க கல்வித் தகவல் மேலாண்மை இணையதளத்தில் (EMIS) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. பள்ளியின் இணைய பக்கத்தில் மாணவர் என்ற இணைப்பில் வழங்கப்பட்டுள்ள Student Transfer Certificate என்ற இணைப்பின் மூலம் பின்வரும் பக்கத்தினை பெற வேண்டும்.




3. மேற்குறிப்பிட்டுள்ள பக்கத்தில் Generate என்ற இணைப்பின் மூலம் தோன்றும் புதிய பக்கத்தில் மாணவர் சார்ந்து அங்க அடையாளம், மருத்துவ ஆய்வு, நடத்தை, தேர்ச்சி விவரம், கல்வி பயின்ற காலம், முதல் மொழி மற்றும் பயிற்று மொழி போன்ற கூடுதல் விவரங்கள் கோரப்படும் அதன் விவரம் பின்வருமாறு.

Padasalai



4. மேற்காணும் விவரங்களை உள்ளீடு செய்தவுடன் மாணவரது மாற்றுச் சான்றிதழ் pdf கோப்பு வடிவில் மாணவரது புகைப்படத்துடன் பதிவிறக்கம் செய்யப்படும், பதிவிறக்கமாகும் மாணவரது மாற்றுச் சான்றிதழ் மென்நகலில் அலுவலக முத்திரை மற்றும் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அசலாக வழங்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பதிவிறக்கம் செய்யப்பட்ட மென்நகல் தலையாசிரியரின் கையொப்பமின்றி மாணவருக்கு வழங்கக்கூடாது. எனவே, மேற்காண் நடைமுறையினை பின்பற்றி நடப்பு கல்வியாண்டில் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து வகை பள்ளிகளிலும் மாணவர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் கல்வித் தகவல் மேலாண்மை இணையதளம் (EMIS) மூலம் மட்டுமே வழங்கப்படவேண்டும் எனவும், இதனை சுற்றறிக்கை மூலம் அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

R 2/5/19

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்ட க் கல்வி அலுவலர்கள்

Padasalai

நகல்:

1) அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
 - பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2) மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த கல்வி, சென்னை-6.
 - பணிவுடன் அனுப்பப்படுகிறது.
3) இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-6.
4) இயக்குநர், மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம், சென்னை-6.
 - தக்க நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.